மட்டக்களப்பு
சூழல்
விழிப்புணர்வு
மாசிகை

# சூழல்சுடர்

புரட்டாதி - 1993 9

"மன்று, 43- புகையிரத நிலையக் குறுக்கு வீதி, மட்டக்களப்பு.



மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்கப்படவும், சூழலுண்டாகும் தாக்கங்களை வெளிக்கொணரவும் "சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்" இவ்விதழை மாதம் ஒரு முறை விரிக்கிறது.

புண்பட்டதே பூமி
மனிதர்
செய்யும் வினை கண்டு
துயர் கொண்டதே
இன்று....

## மண் வளத்தைப் பேணி பணத்தைச் சேமிப்போம்

யோ. இ. சிறிஸ்ரோபர்

நமக்கு உணவளிக்கும் தாவரத்தின் தாய் மண். மண், தாவரங்கள் வளர்வதற்குரிய ஊட்டச்சத்தியான உணவைக் கொடுப்பதன் மூலம், தாவரங்கள் சுயமாக உணவைத் தயாரித்து மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் உணவைக் கொடுக்கின்றன. மண் தன்னகத்தே நுண்ணுயிர்களைக் கொண்டுள்ளதனால், தாவரக் கழிவுகள் இந்நுண்ணங்கிகளினால் சேதனமாகி மீண்டும் தாவரங்களுக்கு உணவாகக் கொடுக்கப்படுகின்றது. மண்ணில் செறிந்த அளவில் சேதனப் பொருட்கள் இருக்கும் பொழுது நீர் ஆவியாதலையும் மண்ணின் ஊடே வடிந்து செல்லுதலையும் மட்டுப்படுத்தி தாவரங்களின் தேவைக்கும் மண்ணில் வாழும் நுண்ணுயிர்களுக்கும் இந்நீர் பயனுள்ளதாக்கப்படுகின்றது.

மண்ணைப் பேண நாம் செய்ய வேண்டியது என்ன?

- நேரடிச் சூரிய ஒளித் தாக்கத்திலிருந்து பாதுகாத்தல் அவசியம்.
- பயிர் சாகுபடி செய்யப்படாத போது மூடு பயிர் வளரச் செய்தல். பயிர் நாட்டத் தயாராகும் நிலைவரைக்கும் களைகள் முளைக்க விடுதல்.
- சேதனப் பசளை போதியளவு மண்ணிலிட்டு மண்ணிலிருக்கும் நுண்ணங்கிகளைப் பெருக்கல்.
- நாற்று நடுகைக்கு மண்ணைத் தயாரிக்கும் பொழுது பசளை நிறைந்த மேல் மண்ணை மிகவும் அவதானத்துடன் கையாளுதல்.
- மழை நீரினால் மேல் மண் கழுவியோடி பயனற்றதாக ஆகாமல் இலை, குழை, வைக்கோல் போன்றவற்றால் மூடிப்பாதுகாத்தல்.
- இடையிடையே வரம்புகள் அமைத்து அவற்றில் நைதரசன் மண்ணில் பதிக்கும் மர இனங்களை நாட்டல்.
- தேவையேற்படின் மிகவும் குறைந்த அளவிலே செயற்கைப் பசளை பாவித்து நுண்ணங்கிகளின் அழிவை மட்டுப்படுத்தல்.

இவை போன்ற மண் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் நாம் மண் வளத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் மண் வளத்தைப் பெருக்கி விளைச்சலையும் அதிகரித்து பணத்தையும் மீதப்படுத்துவோம்.

இயற்கையுடன் இணைந்து வாழ்ந்து வளமான வாழ்வு பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் பாதுகாப்பு

ஆக்கம்:- பா. பரசுராமன், சித்தாண்டி பொது ஜன அபிவிருத்தி மன்றம்

தொடர்ச்சி...

இவ்வாறாக எமது சூழல், நாளுக்கு நாள் பாதிப்படைந்து கொண்டு செல்கின்றது. நாம் வாழும் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணக்கரு இன்று அகில உலக மெங்கனும் உருவாகியுள்ளது. "சூழல் பாதுகாப்பு" என்ற வாசகம் ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு சபையிலும் ஓங்கி யொலிக்கின்றது. ஓசோன் படை மண்டலத்தில் ஓட்டை விழுமளவிற்குப் பாதிப்புற்றுள்ளது. எமது சூழலை இனி வருங்காலங்களிலாவது பேணிப் பாதுகாத்து அதன் நலமானது காக்கப்பட வேண்டுமென்ற நல்லெண்ணம் இன்று பரவலாக உதித்து வருகின்றது. அண்மையில், பிறேசில் நர்ட்டின் றியோடிஜெனிரோ நகரில் சுமார் நூறு நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடி, "சூழற் பாதுகாப்பு உச்சிமகா நாட்டினை" நடத்தியமை சூழற் பாதுகாப்பின் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றது.

நாம் வாழும் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்ற எண்ணம் உலகின் ஒவ்வொரு பிரஜைக்கும் வேண்டும். குப்பை கூழங்களை உரிய முறையில் அகற்றி அவற்றின் மூலம் ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நாடும் தனது நாட்டு மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மலசலகூடம் அமைத்தல், கிணற்று நீருக்குக் குளோரின் இடுதல் போன்ற சுகாதார நடவடிக்கைகளை கிராமங்கள் தோறும் உருவாக்குவதனால் பாமர மக்களுக்கும் சுகாதார வாழ்வை நிர்ணயிக்கலாம். நீர் தேங்கி நிற்கும் இடத்தினை மண்ணால் நிரப்புதல், மழைக் காலங்களில் இறப்பர்ப்பொருட்களை அகற்றுதல் அல்லது ஒதுக்கி வைத்தலாகிய நடவடிக்கைகள் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும். காடழித்தலைத் தடை செய்வது அரசின் கடமையாம். வனபரிபாலன சபையின் மூலமாக காடழிப்பைக் கட்டுப்படுத்தலாம். தேசிய மரநடுகை வாரத்தினை ஏற்படுத்தி மரம் நடும் வழக்கத்தை உருவாக்கலாம்.

நீர்நிலைகளைப் பேணி அவற்றை மாசடையாது காக்க வேண்டும். பூங்காக்கள், தடாகங்கள் என்பவற்றை ஏற்படுத்தி சூழலின் தூய்மையினை உறுதி செய்யலாம். நாட்டின் பிரதேசங்களில் சூழல் பற்றிய விழிப்புணர்ச்சியைப் பொதுமக்களுக்கு ஏற்படுத்த பொதுசனத் தொடர்பு சாதனங்களைக் கையாளலாம். பாடசாலை மாணவரிடையே சூழற் பாதுகாப்பின் அவசியத்தை உணரச்செய்து, அவர்களின் மூலமாக சூழலபிமானத்தை சமூகத்துக்குக் கொண்டு வரலாம்.

மண்ணரிப்பு, மண்சரிவு, மலைச்சரிவு ஆகிய பாதக விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக மூடுதாவரங்களை வளர்ப்பதும், கல்லணை இடுதலும், சமாந்தர வடிகால் அமைத்தலும் அரசின் பொறுப்பாகும். நாட்டில் இயங்கும் தொழிற்சாலைகள் ஒழுங்கான முறையில் கழிவுகளை அகற்றுகின்றன என்பதைப் பரிசோதித்தலும், சமூகவிரோத நடவடிக்கைகளை ஏற்படுத்தும் தொழிலதிபர்களைத் தண்டிப்பதும் சட்டத்தின் கடப்பாடாகும்.

முருகைக்கல் அகழ்தல், உல்லாசப் பிரயாண விடுதிகளை அமைத்தல் என்பன கடற்கரையினது பாதுகாப்பை அழிக்கின்றன. ஆதலால் இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது அவசியம். பாவனைக்குதவாத வாகனங்களை போக்குவரத்தில் ஈடுபடுத்தாமல் இருப்பது அவசியமான ஒன்றாகும்.

ஐக்கிய நாடுகள் சபை, அரச சபைகள் சூழற் பாதுகாப்பினை நிலைநிறுத்தப் பல நடவடிக்கை

தொடர்ச்சி...7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுடர்

## இயற்கை எய்தும் இயற்கைகள்

மனிதன் மரங்களை விடுவதில்லை - அந்த
மழையை வானம் தருவதில்லை
மண்ணில் பயிரோ விளைவதில்லை - இதை
எண்ணிப் பார்க்க இதயமில்லை.

கண்ணா மரங்களை எரிக்கின்றான் - அந்த
சின்ன மரங்களை அழிக்கின்றான்
வெல்ல நாரென சிரிக்கின்றான் - நல்ல
இயற்கையை மனிதன் ஒழிக்கின்றான்.

ஆற்றில் கழிவுகள் மலையாகும் - இந்த
அறிவு கெட்டவர் கலையாகும்
சேற்றில் மீன்கள் கொலையாகும் - நமது
சோற்றில் நஞ்சே நிலையாகும்.

பறவைகள் தங்கிட இடமுமில்லை - ஒரு
பாதையில் ஒதுங்கிட நிழலுமில்லை
சோலைகள் நிறைந்த காடுகளில்லை - அந்த
சூழலில் வாழ்ந்த மனிதருமில்லை.

இயற்கையை அழிப்பது கேடாகும் - இந்த
இழிநிலை செய்வது நாமாகும்
இதனை மறந்தால் இருளாகும் - இதனால்
அழியப் போவது நாடாகும்.

ஆக்கம் :- கவிஞர் முத்துமாதவன்,
சிராமோதய சபைத் தலைவர்,
கறுவாக்கேணி.

## புதிய சூழல் படைப்போம்

அழகான சூழல்
அளவற்ற வானம்
தேவைக்கு மேலே புகையைச்
சிந்துவதால் - நம்
பாரே கெடுகின்றதடா.

வாகனம் புகையைச்
சிந்துகின்றது என்றால்,
ஆறறிவு படைத்த மானிடனும்
தான் சிந்துகின்றான் - தினமும்
சிகரெட் புகையை . . . .
அழகான சூழலைக் காத்திட
இளைஞர்களாகிய நாம்
புறப்படுவோம் என்று
செயற்படுவோம் இன்று.

ஆக்கம் :- ரி. இளங்கோபன்,
மட்/சிவானந்தா வித்தியாலயம்

## சூழலைப் பேணுவோம்

சுத்தம் சுகம் தரும் என்பதை
நித்தம் நாம் மனதில் கொண்டு
கருமம் ஆற்றி வந்தால் என்றும்
கண்டிடோம் ஒரு சிறு நோயையும்.

வீடு வாசல் தனைப் பெருக்கி
குப்பை கூழங்களை ஓரிடத்தில் புதைத்து
நல்ல மரங்களை நாம் நாட்டிவிட்டால்
நன்மை வராதோ நம் சூழலுக்கு.

கால்நடை தனை இங்கு வளர்ப்போரும்
நாளாந்தம் கூட்டிப் பெருக்கி விட்டால்
பார்க்கும் இடம் எல்லாம் நல்ல
பசுஞ் சோலையாய்க் காட்சி தந்திடுமே.

எச்சிலும் மலசலமும் எங்கு பார்த்தாலும்
ஈ மொய்க்கும் பண்டங்களும் நிறைந்துள்ளதனை
கண்ணால் காணாமல் இருப்பதற்கு நாம்
கற்றிடுவோம் நன்கு சூழற் கல்வியினை.

ஆக்கம் :- சே. லோகசேனா,
மட்/செங்கலடி மகா
வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடம்

திரு.கு. சண்முகம் (ஆசிரியர்), மட்/களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலயம்

## பழப் பயிர்ச் செய்கை - 2

### பப்பாசிப் பழச் செய்கை



மட்டக்களப்பு மாவட்டத்தின் எந்தப்பகுதியிலும் செழித்து வளர்ந்து நல்ல விளைவைத்தரத்தக்க பழப்பயிர்களில் பப்பாசியும் ஒன்றாகும். பொதுவாக ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும் இடம்பெற வேண்டிய முக்கிய பழமரம் இந்த பப்பாசியாகும். பப்பாசியை நாம் பயிரிடும்போது இரண்டு பெரிய நன்மைகளைப் பெறுகின்றோம். போசாக்குள்ள கனியைப் பெறுவது ஒன்று. நமது சூழலைப் பேணுவது மற்றொன்று. ஆகவே, இவ்விரு நோக்கங்களை அடையும் பொருட்டு இக்கட்டுரையானது இடம்பெறுகிறது.

பப்பாசி மிக விரைவாக வளர்ந்து பயன்தரும் ஒரு பயிராகும். பப்பாசியின் ஒரு விசேட அம்சம் காய்த்துக் கனி கொடுக்கத் தொடங்கிவிட்டால் இடைவெளியின்றி வருடம் முழுவதும் பழங்களைப் பெறலாம். இப்பழத்தில் உயிர்ச்சத்துக்கள் " ஏ ", " சி " கல்சியம், கனிப்பொருள் என்பன அதிகளவில் காணப்படுகின்றன. அத்தோடு உணவை இலகுவில் சமிபாடடையச் செய்யும் "பப்பெயின்" என்னும் நொதியத்தையும் பப்பாசிப்பழம் கொண்டுள்ளது.

### பொருத்தமான மண்ணும் காலநிலையும்

வெவ்வேறு காலநிலையுள்ள பிரதேசங்களிலும் பப்பாசி சிறப்பாக வளரும். கடல் மட்டத்திலிருந்து 1300 மீற்றர் உயரம் வரையான எத்தகைய பிரதேசத்திலும் பப்பாசியைப் பயிரிடமுடியும். பொதுவாக நீர் வடிந்து செல்லக்கூடிய எத்தகைய மண்ணிலும் பப்பாசியைத் தயங்காது பயிரிடலாம். வருடாந்தம் 1500 - 2000 மி.மீற்றர் (60-80 அங்) மழைவீழ்ச்சி பரவலாகக் கிடைக்கின்றதும், பிரகாசமான சூரியஒளி உள்ளதுமான இடங்கள் பப்பாசிப்பழச் செய்கைக்கு மிகமிகப் பொருத்தமானவையாகும்.

### வர்க்கங்கள் :-

குறிப்பிட்டுக் கூறத்தக்க பப்பாசி வர்க்கங்கள் கிடையாது. விரைவில் காய்க்கின்ற நடுத்தர உயரமுடைய, இனிப்பான பெரிய பழங்களைத் தருகின்ற மரங்களிலிருந்து விதைகளைப் பெற வேண்டும்.

### நடுகை :-

3மீற்றர் × 3மீற்றர் (10 அடி) 60 ச.மீ. (2 அடி) நீளம், 60ச.மீ (2 அடி) அகலம், 60ச.மீ. (2 அடி) ஆழம் உடைய குழிகளை வெட்டி மேல்மண், சேதனப்பசளை, அடிகட்டுப்பசளை என்பவற்றின் கலவையால் நிரப்புக. இவ்வாறு செய்து ஒரு மாதத்தின் பின் விதைகளை இக்குழிகளில் நடலாம்.

நன்கு பழுத்த, இனிப்பான பழங்களிலிருந்து விதைகளைத் தெரிவுசெய்து நன்கு நீரினால் கழுவி, விதையைச் சூழவுள்ள சவ்வைத் அகற்றவேண்டும். அதன்பின், உடனடியாக விதைகளை நடவேண்டும். ஒவ்வொரு குழியிலும் 3-4 விதைகளை நடுக. பப்பாசிக் கன்றுகளை வேறிடங்களுக்குக் கொண்டுசெல்ல வேண்டுமாயின், விதைகளைப் பொலித்தீன் பைகளில் நடவேண்டும்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுமாநகரில் மாபெரும் சூழல் கலைநிகழ்ச்சிகள் - கண்ணோட்டம்

## உலக சூழல் தினப் போட்டி நிகழ்ச்சிகள் - 1993 யூன் 5

## நாடகம், வில்லிசை, நாட்டுக் கூத்துப் போட்டிகள்

திருமதி. நிர்மலா ஜெயராஜா, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும், அறிவையூட்டும் பொருட்டும், ஆண்டுதோறும் யூன் 5ஆம் திகதியான உலக சூழல் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே, சித்திரம், கட்டுரை, பேச்சு, விவாதப் போட்டிகளை மட்டக்களப்பு மாவட்ட சூழல் முகவரவையும், மன்று நிறுவனமும் இணைந்த வகையில் ஒழுங்குசெய்தும், நடாத்தியும் வந்துள்ளன.

மன்று நிறுவனத்தில் நடைபெற்ற சூழல் அவிக்கூட்டங்களில் மாணவர்களின் ஆர்வத்தின்படியும், பல்வேறு அறிஞர்களின் ஆலோசனைகளின்படியும் சூழல் விடயங்களைப் பரப்புவதற்கு நாடகம், வில்லிசை, நாட்டுக்கூத்து என்பன சிறந்த ஊடகங்களாக அமையமுடியும் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்நிகழ்ச்சிகளிலே போட்டிகளை ஒழுங்கு செய்வது எனத்தீர்மானிக்கப்பட்டது.

எனவே, மன்று நிறுவனமும், மட்டக்களப்பு மாவட்ட சூழல் முகவரவையும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான கூட்டம் ஒன்றினை ஒழுங்கு செய்தன. பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.செ.புண்ணியமூர்த்தி, மன்று நிறுவனப் பிரதித் தலைவர் திரு.மனோ இராஜசிங்கம், மாவட்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.காசுபதி நடராஜா, மன்று நிறுவன இணைப்பாளர் திரு.ஜோ.இ.கிறிஸ்ரோபர், ஏனைய உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் அடங்கிய ஆலோசனைக் குழு இந்நிகழ்ச்சிக்கான எண்ணக்கருக்களை வடிவமைத்தனர். முக்கியமாக மாவட்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரும், மன்று நிறுவன இணைப்பாளர் திரு.ஜோ.இ.கிறிஸ்ரோபர் அவர்களும் இவ்வடிவமைப்பில் பெரும்பங்களிப்பைச் செய்தனர்.

போட்டிகளை இரு கட்டங்களாக நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

1வது கட்டம் - பிரதேச செயலாளர் பிரிவு மட்டம்.

2வது கட்டம் - பிரதேசச் செயலாளர் பிரிவு மட்டத்தில் 1ம் இடம் பெறுபவைகளைத் தேர்ந்தெடுத்து மாவட்ட மட்டப் போட்டிகளை நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், இந்நிகழ்ச்சிகளை ஜனரஞ்சகமாக்கும் நோக்குடன் கலைக்கழகங்கள், கிராமோதயசபைகள் முதலிய கழகங்களை ஈடுபடுத்துவது சூழல் கருத்துக்களை பரப்புவதற்கு கூடுதலான பயனைத் தரவல்லது என முடிவு செய்யப்பட்டு போட்டி நிகழ்ச்சிகள் பின்வருமாறு வடிவமைக்கப்பட்டன:

| நிகழ்ச்சி | பங்குபற்றுபவர் விபரம் | எண்ணிக்கை | நேரம் | விடயம்/தலைப்பு |
|---|---|---|---|---|
| நாடகம் | 9ம் ஆண்டுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் | 12 பேருக்கு மேற்படாதிருத்தல் | 20 நிமிடம் | மரத்தை நீ காத்தால் அது உன்னைக் காக்கும் |
| வில்லிசை | 6-8ம் ஆண்டுக்குட்பட்ட மாணவர்கள் | 6 பேருக்கு மேற்படாதிருத்தல் | 15 நிமிடம் | மாசு மிகுந்த உலகிலே வாசிருந்தும் பயனில்லை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமாநகரில் மாபெரும் சூழல் கலைநிகழ்ச்சிகள் ..... 5ஆம் பக்கத் தொடர் ....

| | | | | |
|---|---|---|---|---|
| நாட்டுக் கூத்து | பிரதேசச் செயலகப் பிரிவினுள் இயங்கும் கழகங்கள் / நிறுவனங்கள் | 7 பேருக்கு மேற்படாதிருத்தல் | 30 நிமிடம் | உருவாகும் வாரிசுக்கு உயிலாக வைப்போம் ஆரோக்கியமிக்க சுற்றாடலை |

இவற்றுடன் பொதுவான நிபந்தனைகள் சிலவும் கொடுக்கப்பட்டன.

1. நிகழ்ச்சிகள் சுற்றாடல் பாதுகாப்பினை மட்டுமே மெய்ப்பொருளாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. மாவட்ட மட்டப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு மட்டும் பாிசில்கள் வழங்கப் படும்.
3. போட்டியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்

மேலும் பல நிபந்தனைகளுடன் கூடிய அறிவித்தல்கள் 1ம் தவணை ஆரம்பத்திலேயே அனைத்துப் பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டது. கல்விப் பணிப்பாளருக்கும், பிரிவுக் கல்வியதிகாரிகளுக்கும் பிரதிகள் வழங்கப்பட்டன. கல்விப் பணிப்பாளர் அவர்களும் பிரத்தியேக கவனம் எடுத்துப் போதிய ஊக்கம் அளித்ததன்பேரில், மாவட்ட மட்டத்தின் 80%மான பாடசாலைகள் நாடகம், வில்லிசை ஆகிய இரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுவதற்கு விருப்பம் தெரிவித்து விண்ணப்பங்களை அனுப்பியிருந்தன. நாட்டுக்கூத்துக்கும் மண்முனை வடக்கு, மண்முனை மேற்கு, மண்முனை, மண்முனை தென்எருவில் பகுதிகளில் இருந்து விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

ஜனாதிபதி இடம்பெயர் சேவையை முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள், கூட்டங்கள் காரணமாக உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள் தொடர்ந்தேர்ச்சியாக இந்நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்துவது இயலாமற் போனமை, கட்டட வசதிகள் பெற முடியாமை என்பன போன்ற காரணங்களால் யூன் 5ஆந் திகதி நடாத்துவதைப் பின்போட்டு, ஆயத்தப்படுத்துவதற்கு போதிய அவகாசம் அளிக்கப்பட்டு தேசிய மர நடுகை வார காலத்திற்குள் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டன. அத்துடன் மன்று நிறுவன உத்தியோகத்தர்கள் பாடசாலை தோறும் சென்று போதிய அறிவுறுத்தல்களையும் வழங்கினர்.

அதன்படி பிரதேசச் செயலக மட்டப் போட்டிகளை அவ்வப்பகுதி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரிவுக் கல்வியதிகாரிகளின் துணையுடன் அவ்வப் பிரதேசங்களில் நடாத்தினார்கள். மன்று நிறுவன உத்தியோகத்தர்களும் இப்போட்டி நிகழ்வின்போது பங்கு பற்றினார்கள். அவ்வப்பகுதியிலுள்ள கலைஞர்கள், அறிஞர்கள் நடுவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முடிவுகளை மேற்கொண்டனர்.

11.09.93 - மண்முனை தென் எருவில்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவு

**பங்குபற்றிய பாடசாலைகள்**

1. மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்
2. மட்/குருமண்வெளி சிவசக்தி வித்தியாயலம்

**வில்லிசை**

1ம் இடம் - மட்/குருமண்வெளி சிவசக்தி வித்தியாலயம்

2ம் இடம் - மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்

**நாடகம்**

1ம் இடம் - மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரும் ....

# பூமித்தாயின் ஆடை மரங்களாகும்

ஆடை மனித உடலைப் பாதுகாக்கின்றது. மரங்கள் பூமியைப் பாதுகாக்கின்றன. ஆதிகாலத்து மனிதன் காட்டுமிராண்டியாக வாழ்ந்தபோது அவனது ஆடையாக மரங்கள் பயன்பட்டன. நாகரிக உலகிற்கு மனிதன் வந்துவிட்ட பிறகும் பருத்தி ஆடையாகப் பயன்படுகின்றது. ஆனால், மரங்கள் எப்போதும் பூமிக்கு ஆடையாக இருந்து அதனைப் பாதுகாக்கின்றது. பூமி பாதுகாக்கப்பட்டால்தான் பாரிய விளைவுகளிலிருந்து உயிரினங்கள் தப்பமுடியும். இதனை நாம் நன்கு அறிந்திருந்தும் பின் விளைவுகளைப்பற்றி சிறிதும் சிந்திக்காமல் செயற்படுகின்றோம். நாளாந்தம் மரங்கள் அழித்தொழிக்கப்படுகின்றன. நம் தேவைக்காக மரங்கள் வெட்டப்படும் போது அவ்விடத்தில் குறைந்தது ஒன்றுக்கு ஐந்து மரங்களையாவது நடவேண்டும். அவ்வாறு செய்யாது தொடர்ச்சியாக மரங்களை அழிக்கும் போது பல பாரிய விளைவுகளை எதிர்நோக்குகின்றோம். மண்ணரிப்பு ஏற்பட்டு நிலம் குறுகிச் செல்கிறது. மண்சரிவு ஏற்பட்டு பலத்த தாக்கம் ஏற்படுகிறது. வெள்ளப்பெருக்கு அபாயம் உண்டாகிறது. இப்படியாக எத்தனையோ ஆபத்துக்களையும் நஷ்டங்களையும் எதிர்கொள்கிறோம்.

இயற்கை அளித்த கொடை மரங்களாகும். இவ் அரிய மரங்களைக் குறைத்துக் கொண்டு போவதனால் இயற்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சில காலங்களுக்கு முன் மாரி காலந் தொடங்கி விட்டால் போதியளவு மழை பெய்தது. தற்போது மழைவீழ்ச்சியில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது எமக்குத் தேவையான போது மழை கிடைப்பதில்லை அல்லது கூடுதலாகவோ குறைவாகவோ பெய்கிறது. இதனால் பல பயன்களை இழந்து கஷ்டப்படுகிறோம். இதற்கெல்லாம் காரணம் மரங்களை வெட்டி அழிப்பதுதான் என்பதை நாம் உணர வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் இதை உணர்ந்து உடன் செயற்படல் வேண்டும். அலட்சியப்போக்கை விட்டு அவதானத்துடன் காரியமாற்றுதல் வேண்டும். இயற்கையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அனைவரும் அறிந்திரண்டு சீர் செய்ய முன்வர வேண்டும். உங்கள் காலத்தில் இந்த மரம் பயன் தராதென்னும் அறியாமையை நீக்கி ஆளுக்கொரு மரம் நட்டுப் பேணிக் காக்க வேண்டும். விஞ்ஞான வளர்ச்சியைக்கண்டு நாம் பூரிப்படைகிறோம். நன்மைக்குச் சமமான தீமையும் அதில் உண்டு. ஆனால், மரத்தின் வளர்ச்சி எப்போதும் நன்மையே தரவல்லது. எனவே, பூமித்தாயின் ஆடையைப் பெருக்கிடுவோம். பாலைவனமாக மாறிக் கொண்டிருக்கும் பூமியை சோலைவனமாக மாற்றிடுவோம். சுகமாக வாழ்ந்திடுவோம்.

ஆக்கம் :- திரு. கா. நடராஜா,
ஆரையம்பதி - 03.

---

சூழல் பாதுகாப்பு 2ஆம் பக்கத் தொடர்........

களை மேற்கொள்கின்றன. அணுவாயுதக் கட்டுப்பாடு, நீர் நிலைப் பாதுகாப்பு, வனபரிபாலன சபை, மரம் நடும் இயக்கம், தேசிய வடிகால் சபை, சூழற் பாதுகாப்பு அதிகார சபை, போன்ற நிறுவனங்கள் மகோன்னத நோக்குடன் சூழலைப் பாதுகாக்கப் பாடுபட்டு வருகின்றன. உலக நிறுவனங்களாலோ அன்மையான சட்ட விதிகளாலோ, தனி அரசினாலோ மாத்திரம் சூழற் பாதுகாப்பினை ஏற்படுத்த முடியாது. தனிமனித சிந்தனைப் போக்கில் மாற்றம் நிகழ்தல் வேண்டும், ஒவ்வொரு பிரஜையும் சூழல் தனைப் பாதுகாக்க முன்வர வேண்டும். அனைவரும் ஒரு குடையின் கீழ் திரண்டு அரிய கொடையாம் சூழலைப் பாதுகாப்பதற்கு அணி திரள்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்புகள்

* செல்வி. சுஜா கிருபைராஜா,
விஞ்ஞானபீடம்,
கிழக்குப் பல்கலைக் கழகம்,
வந்தாறுமூலை.

தங்களின் மாத வெளியீடான "சூழல் சுடர்" இதழினைப் படிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. மட்டக்களப்பு மாவட்டத்தின் சூழலின் முன்னேற்றத்திற்கு மன்று எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டக்கூடியதும், முன்னின்று வரவேற்கக்கூடியதுமே. அந்த வகையில் சூழல் சுடர் ஆற்றிவரும் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. தொடர்ந்தும் இவ்விதழ்களை வாசிப்பதற்கு ஆசைப்படுகின்றேன். எனக்கு இச் சஞ்சிகையைத் தொடர்ந்தும் அனுப்பி வைக்குமாறு உங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

* திரு. கே. எஸ். நாகேஸ்வரன்,
செயலாளர்,
உதயசூரியன் விளையாட்டுக் கழகம்,
திருக்கோவில்.

எமது கழகத்திற்குத் தாங்கள் அனுப்பிவைத்த "சூழல் சுடர்" கிடைக்கப்பெற்றேன், மிக்க நன்றி. சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் "சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்" ஒன்றை அமைத்த அதன் மூலம் தாங்கள் ஆற்றிவரும் நற்பணிக்கும் நற்சேவைக்கும் எமது பாராட்டுக்கள்.

இம் மன்றத்தின் பணியும், நல்ல பயனுள்ள கருத்துக்களையும், விபரங்களையும் எமது கழக அங்கத்தவர்களும் அறிய வேண்டுமென்பதற்காக எமக்கு இவ்விதழை அனுப்பி வைத்தமைக்காக எமது கழகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு உங்கள் பணி மென்மேலும் தொடர எமது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

* திரு. ஆ. தட்சணாமூர்த்தி (ஆசிரியர்),
தலைவர், தொழிலாளர் கலைக்கழகம்,
துறைநீலாவணை,

"சூழல் சுடர்" நிறுவனத்தாருக்கு தங்களது பத்திரிகையை எமது நூலகத்தில் வாசித்தேன். அதில் பல கருத்துக்களைப் படித்தேன். இவ்வாறான மன்வாசனை கருத்துக்களைத் தாங்கிவரும் மன்றினருடன் ஒருவராக இணைய விரும்புகின்றோம். எங்கள் அமைப்பையும் சேர்க்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

* திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை,
அதிபர்,
மட்/ஆரைப்பற்றை இ.கி.மி. பாடசாலை,
ஆரைப்பற்றை.

"சூழல் சுடர்" மிகவும் பிரயோசனமான வெளியீடு. தாங்கள் இந்நல்ல முயற்சியில் ஈடுபட்டுள்ளதை மிகவும் பாராட்டுகின்றோம். இச் சஞ்சிகையை இப் பாடசாலை தொடர்ந்தும் பெற விரும்புகின்றது.

---

<u>வெளியீட்டுக்குழு</u>

சுடரின் தூண்டுகோல் :-

மனோ இராஜசிங்கம் }
யோ. இ. கிறிஸ்ரோபர் } மன்று

நெறிப்படுத்துனர் குழு :-

ரெ. விமலா }
அ. யோகராணி } மன்று
க. லீலா }

ஆசிரியர் குழு :-

த. மதிவண்ணன் - வந்தாறுமூலை சி. அ. ச.
பூ. சுந்தரலிங்கம் - பொதுஜன அ.ம.
வி. முரளிதரன் - செங்கலடி ம.வி.
சோ. சுந்தரமோகன் - கோல்ட் பிஷ் வி. க.
லெ. முகம்மது அஸ்ரப் - அல்-ஹிறா வி.
பி. சந்திரவதி - உழைக்கும் ம. அ. நி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடழிப்பும் மட்டக்களப்பு மாவட்டத்தின் எதிர்காலமும்

திருமதி.விஜயா இராமச்சந்திரா (பிரதி-ஆசிரியை), மட்/குருமண்வெளி சிவசக்தி வித்தி.

பச்சைப் பசேல் என்ற பசும் மரங்கள், செக்கச் சிவந்திருக்கும் பழமரங்கள், அங்கு தம்பிச்சைப்படி உலவிவரும் வனவிலங்குகள் இத்தனையும் எமது மாவட்டத்தின் காட்டுவளங்களே. ஆனால் இன்று கடுகதி வேகத்தில் நடக்கும் காடழிப்பினால் மீனினங்கள் பாடுவதையும், கானகத்தில் புள்ளினங்கள் கூவுவதையும் காதினாற் கேட்க முடியவில்லை. காரணம், காட்டு மரங்கள் வெட்டப்படுவதாகும்.

காட்டு வளத்திற்கு ஊறு விளைவிப்பதால் அவ்வளம் மட்டுந்தான் அற்றுப்போகின்றதா? இல்லை எல்லையற்ற தேவைகள் நிறைவேறாதிருக்கின்றன கட்டடத் தேவைகட்கும், காட்டுவாழ் விலங்கினத்திற்கும், கடும்மழை பெய்வதற்கும், மண்வளம் கொழிப்பதற்கும், கோரப்புயலின் வீரத்தைக் குறைப்பதற்கும்.. என இன்னும் எத்தனை எத்தனையோ கருமங்களைக் காடுகள் செலவின்றி எமக்குச் செய்து தருகின்றனவே. இவ்வாறு அளப்பரிய சேவை செய்யும் காடுகளை நொடிப் பொழுதில் அழிப்பதால் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வடகீழ்ப்பருவக்காற்றின் பெருவெள்ளத்திற்கும், புயற் காற்றிற்குமே வித்திடுகின்றனர் என்பதை அறிவதில்லை.

கடந்த பல வருடங்களாகக் கோடை காலத்தில் மின்சார வெட்டு மேற்கொள்ளப்படுவது உங்களுக்குத் தெரிந்ததே. அவ்வேளைகளில் தொழிற்சாலைகள் செயலிழக்கின்றன. வீட்டு வேலைகள் தாமதிக்கின்றன. இந்நிலைக்கு மூல காரணம் கருந்த காலத்தில் மழை தரு மரங்கள் இல்லாமையே. அத்தோடு, மரங்கள் தொடர்ந்து அழிந்து கொண்டே இருக்கின்றன. இந்நிலை மேலும் நீடித்தால் எதிர் காலத்தில் எமது மாவட்டத்தில் மின்சார சேவையும் நலிவடைந்துவிடும் என்பதை நாம் நன்குணர வேண்டும்.

உன்னிச்சை, வடமுனை, வாகரை போன்ற எமது காட்டுப் பிரதேசங்கள் சேனைச் செய்கைக்காகவும், வீட்டுத் தேவைகட்காகவும் விரைவாக அழிந்து கொண்டிருக்கின்றன. அதுமட்டுமா? நாம் பிறந்தவுடன் உறங்கும் தொட்டில் தொடக்கம், இறந்தவுடன் புதைக்கும் பெட்டி வரைக்கும் பெருமளவு மரங்களே பலியாகின்றன. இந்நிலையானது நீடித்தால் பசுமையான எமது பச்சிலைக் காடுகள் ஒரு காலத்தில் பாலைவனங்களாக மாறலாமல்லவா?

நாட்டின் வன்செயல்களால் பாதிப்புற்ற மட்டக்களப்பு மக்களைக் காப்பதாகக் கூறிய காவற்படையினரும் காடுகளை அழித்துதான் தமது காவல் அரண்களை ஏற்படுத்தினர். காடுகள் மட்டுமா அழிகின்றன? காய்க்கும் மரங்களும், நிழல்தரு விருட்சங்களும் வேருடன் தலைசாய்கின்றன. நாம் பேணிக்காத்த பெருமரங்கள் எரிந்து சாம்பலாகின்றன. இந்நிலை மேலும் இம்மாவட்டத்தின் பேரழிவிற்கு உரமிடுவதனால் நாமனைவரும் நாளுக்கொரு நற்பணி செய்ய உறுதிகொள்ள வேண்டும்.

காடுகள் பாதுகாக்கப்பட்டால் வற்றாத வாவிகள் வயல்களில் தவழும் மீனினங்கள் பாடும், வனவிலங்குகள் களிப்புறும் நாடும் வளம்பெறும். . அன்றேல், காடழிப்பால் மட்டக்களப்பு மாவட்டம் எழில் குலைந்து, வளங்குன்றி, வறுமையின் பிடியிலும், வரட்சிக் கொடுமையிலும் மடியத் தொடங்கும். அதுமட்டுமா? நோய் காக்கும் அரியபல மூலிகைகள் அழிக்கப்படும். வனவிலங்குகள் வாழிடமின்றித் தவிக்கும். இந்நிலையில் இருண்மயமான எதிர்காலம் எம்மை எதிர் நோக்கிக்கொண்டிருக்கின்றது என்றுணர்ந்து

"நம் சூழலைப் பாதுகாக்க இன்றே முயன்றிடுவோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

* சமூகக் காடு வளர்ப்பை நோக்காகக் கொண்டு மன்று 10 கிராமங்களைத் தெரிவுசெய்ய நினைத்துள்ளது. அதற்கிணங்க குருமண்வெளி, பாலமீன்மடு, பேத்தாளை, கறுவாக்கேணி, கல்மடு, பெரிய கல்லாறு ஆகியவற்றின் கிராமோதய சபைகளைச் சந்திக்கச் சென்றது.

**********

* 28.8.93 அன்று "சமூகக் காடு வளர்ப்பு" என்னும் தலைப்பின்கீழ், கழகங்களிற்கான கூட்டம் நடைபெற்றது. இதில் 10 கழகங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களும், விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. கனகசபை அவர்களும் கலந்து கொண்டார்கள்.

**********

* மூலிகைகளின் செயற்பாடுகள் பற்றி அறிவதற்காக பாடசாலைகளைச் சந்திக்கச் சென்றிருந்தோம். மாணவர்களிடையேயும், ஆசிரியர், அதிபர்களிடையேயும் சூழல் பற்றிய விழிப்புணர்ச்சி மிகையாகக் காணப்பட்டது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

**********

* சமூகக் காடு வளர்ப்பில் மாணவர்களையும் ஈடுபடுத்தும் வண்ணம், நாற்றுமேடைத் திட்டத்தையும், விதைகள் சேகரிப்பதனையும் ஊக்கப்படுத்தினோம். அதற்கிணங்க பல பாடசாலைகள் நாற்றுமேடை செய்வதாகவும், ஒருசில பாடசாலைகள் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளதனால் விதைகள் சேகரிப்பைச் செய்வதாயும் உற்சாகத்துடன் கூறினர்.

**********

* 11.9.93 சனிக்கிழமையன்று "சூழற் சுடர் ஆசிரியர் குழுக் கூட்டம்" நடைபெற்றது. பல தரமான ஆக்கங்கள் கிடைத்தன.

**********

* சமூகக் காடு வளர்ப்பினை பாடசாலை, கழகம் அல்லது தனிநபர் செய்ய விரும்பினால் அவர் 5000 நாற்றுக்களை உருவாக்கித் தருவாராயின் அவருக்கு ரூபா. 1,500/- சன்மானமாக வழங்கப்படும். இதில் பழமரங்கள், நிழல் தருமரங்கள், தளபாட மரங்கள் என்பன அடங்க வேண்டும். இதற்காக நாற்றை இடுவதற்குரிய பைகளும், சேதனப்பசளை கொள்வனவு செய்ய உதவியும் எம்மால் வழங்கப்படும்.

**********

---

உங்கள் கவனத்திற்கு :-

"சூழல் சுடர்" ஒரு மாதாந்த வெளியீடு. இதனைத் தொடர்ந்து பெற விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

"சூழல் சுடர்",
மன்று,
43, புகையிரத நிலையக் குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.

அரச பணி

திரு. க. சண்முகம். (ஆசிரியர்,
மட/கறுவாக்கேணி
விவேகானந்தா வித்தி.)
கறுவாக்கேணி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org